வல்லூறுகள்

மொட்டை மாடியில் படுத்து அண்ணாந்து தாரகைகளைப் பார்த்தவாறே அம்மா சொல்கிறாள்:

"ஒவ்வொரு நட்சத்திரமும் பிணம் தின்னிக் கழுகோட மூக்கு மாதிரி கொடூரமா மின்னறது பாரு ஷைலு. திடீர்னு ஒரு நாள் பாரு, நட்சத்திரங்களுக்குப் பதிலா ரக்கைகளை விரிச்சுண்டு மானத்தை அடைச்சிண்டு வெறும் வல்லூறுகளே இருக்கும். கீழே எல்லாம் பிணங்கள், பிணங்கள், பிணங்கள்தான்!"

"அம்மா, போதுமே! இது என்ன கற்பனை?"

"இது உண்மைடீ" என்கிறாள்.

"ராமு தாதா கார்த்தாலே வந்தாரே, பார்த்தாயா? தொடைச்சதை எல்லாம் சுருங்கி முகத்திலே பாளம் பாளமாகத் தோல் வெடிச்சு, கை எலும்பு துருத்திண்டு. வந்து உங்க அப்பாகிட்டே பலகீனமான குரல்லே 'ஷர்மா பாபு, நிஜமாவே கடையிலே அரிசியோ, கோதுமையே இல்லையா? என் பொண்ணுக்கு இது பிரசவ சமயம். வெறும் வயிறுதான் உடம்பிலே தெரியறது. சாப்பிட ஒண்ணும் இல்லை' என்றார். பீஹார்லே உங்க அப்பா பெரிய மனிதர். எனக்கு அவர் வெறும் பிணம் தின்னிக் கழுகு தான். மாமிசத்தைக் கொத்தித் தின்னு பசியாறும் வல்லூறு தான். அவர் கண், மூக்கு, ரக்கை மாதிரி இரு கைகள்... ஐயோ! எல்லாம் மாமிசம் ஒட்டிண்டு இருக்கற உறுப்புக்கள்தான்..."

இது தினம் நடப்பதுதான். மொட்டை மாடியில் அம்மா நிறையப் பேசுவாள். நான் இருந்தால் என்னிடம். ப்ரமரா இருந்தால் அவளிடம். இல்லாவிட்டால் தனக்குத்தானே. அவளுக்குப் பேசியாக வேண்டும். ஒவ்வொரு முறை விடுமுறைக்கு வந்து டெல்லி திரும்பும்போதும் சொல்வாள்:

"உனக்குத் தப்பிக்க ஓர் இடம் இருக்கு." நிலைப் படியில் சாய்ந்து கொண்டு, கூந்தலை இடுப்பு வரை, பின்னாமல், அவிழ்த்துவிட்டு,

உணர்ச்சிகள் பொங்கும் கண்களை மற்றவர் மேல் ஓடவிட்டு அவள் நிற்கும் போது, அப்பாவின் கைதியாய் அவளை நினைத்துப் பார்ப்பது கஷ்டமாகவே இருக்கும். இவளை யாரால் கைப்பற்ற முடியும்? யாரால் ஆக்கிரமிக்க முடியும்? யாரால் அடக்க முடியும்?

"என் படிப்பு முடிந்து வேலை கிடைத்ததும் நீ என்னோட இரேன் அம்மா."

'பளிச்' சென்று சிரிப்பாள்.

"அதற்குள் பிணம் தின்னிக் கழுகுகள் என்னைச் சாப்பிட்டுவிடும்."

"ஏன் இப்படி அசிங்கமாய்க் கற்பனை செய்யறே?"

"இதுதான் உண்மை. டெல்லியிலே உட்கார்ந்துண்டு இதைப் பார்க்க முடியாது."

சில சமயம் அவளுக்கு மூளை சரியில்லை என்று தோன்றும். மனத்தை அதிர வைக்கும் காட்சிகளைக் கற்பனை செய்து கூசாமல் சொல்வாள். சில சம்பவங்களை மறக்க முடியவில்லை.

அப்போது ப்ரமரா பிறந்திருக்கவில்லை. கோபால் பாபு வீட்டுக்கு வந்திருந்தார்.

"ஷைலு, நீ விளையாடப் போ" என்று அம்மா அனுப்பிவிட்டாள்.

நிலைப்படியின் கீழ் சென்று ஒளிந்துகொண்டேன். அவர்கள் இருவரும் பேசினார்கள். பேச்சை நினைவு வைத்துக்கொள்ளும் வயதில்லை. முகமெல்லாம் சிரிப்பு வழிய அம்மா பேசினாள். எதற்கோ அவள் தலையைப் பின்னால் சாய்த்து வாய்விட்டு சிரிக்கும்போது, அப்பா கதவருகே வந்தார். நிலைப்படிக்குக் கீழே என் அடிவயிறு பயத்தில் ஒட்டிக்கொண்டது.

அப்பா ஏதும் சொல்லும் முன் கோபால் பாபு வெளியே போனார்.

பூஜை அறைக்குப் போய்க் கங்கைச் சொம்பை எடுத்துவந்தார் அப்பா.

என்ன கேட்டார் என்று அப்போது புரியவில்லை. பிறகு அம்மா சொல்லித் தெரியும் அப்பா அம்மாவிடம் கங்கை ஜலத்தின் மேல் கை வைத்து, தான் புனிதமானவள் என்று நிரூபிக்கச் சொன்னாராம். சத்தியம் செய்யச் சொன்னாராம்.

கங்கைச் சொம்பை அவர் கையிலிருந்து வாங்கி வீசி எறிந்தாள் அம்மா அன்று. அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. அடிவயிற்றி லிருந்து ஓர் அவல ஓசையை எழுப்பியவாறே எச்சிலைக் காறி உமிழ்ந் தாள், அவர் முகத்தில். அவள் முகம் சிவந்து கண்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன.

ஒரு கணம் பின்வாங்கிப் பின் தடித்தடியாய் விரல்கள் உள்ள கையை ஓங்கி அம்மாவின் முகத்தில் அடித்தார் அப்பா. அம்மா தடுத்துக்கொள்ளாமல் அப்படியே நின்றாள். மீண்டும் இருமுறைகள் முகத்திலேயே அடித்துப் பின் அம்மாவை அப்படியே தூக்கிச்சென் றார் தன் அறைக்கு.

அதன் பின் அம்மாவின் குரலில் ஓர் உலோகத் தன்மை வந்துவிட் டது போல் தோன்றியது. அவள் குரல் ஏற்றத்தாழ்வின்றி, இரும்புத் துண்டு தரையில் 'லொட்' டென்று விழுவது போல் உயிரற்று ஒலித்தது. அதன் பின் ப்ரமரா பிறந்தாள்.

இன்னொரு நிகழ்ச்சியும் மறக்கவில்லை. காலேஜ் போக ஆரம்பித் தாகிவிட்டது நான். அப்பா இன்னும் கடை திறக்கவில்லை. வேலை யில் இருந்தார். வீட்டின் பின் பக்கம் பெரிய தோட்டம், தென்னை, வாழை, கொய்யா, மா மரம் என்று நீண்டு கொண்டே போகும். தோட்டத்தின் மூலையில் ஒரு ஷெட்; பெட்டிகள் எல்லாம் போட்டு வைத்திருந்த ஷெட்.

இரவு பதினொரு மணி அளவில் அம்மா ஒருநாள் எழுந்தாள். அலமாரியைத் திறந்து டார்ச்சை வெளியே எடுத்தாள். நான் தூங்கு கிறேனா என்று ஒரு முறை பார்த்தாள். அவள் சென்ற பின் நான் மெல் லப் பின்தொடர்ந்தேன். இருட்டில், பின் பக்கப் படிகளில் ஓசைப் படாமல் இறங்கி ஷெட்டை நோக்கி நடந்தாள் அம்மா.

ஷெட்டின் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே போனாள். ஓரத் தில் இருந்த கிழிசல் பாயைத் தரையில் விரித்துக் குப்புறப் படுத்தாள். கிளைகள் முறியும் ஓசை போல் விம்மல்கள் எழுந்தன அவளிட மிருந்து. அந்த இரவில் கள்ளிப் பெட்டிகள் நிறைந்த அந்த உக்கிராண அறையில் அவள் பெருத்த ஓசையுடன் அழுதது மனத்தை என்னவோ செய்தது. அம்மா அழுது பார்த்ததில்லை. அவள் பிடிவாதக்காரி. அப்பாவின் ஆண்மையையும், கணவன் என்ற பெருமிதத்தையும் வெறும் மௌனத்தாலேயே கொன்றவள்.

ப்ரமராவுக்குப் பின் அவள் அப்பாவின் அறைக்குச் செல்ல வில்லை. அப்பாவின் குணத்துக்கும், அகந்தைக்கும், ஊரை ஏய்க்கும் நரித்தனத்துக்கும் அவள் அந்த வீட்டுக்குள் இருந்துகொண்டே தண் டனை தந்தாள். ஒரு நபர் என்ற முறையில் கூட அவரை மதிக்காமல் இருந்தாள். அவரை உடைகள் இல்லாமல் நிர்வாணமாய்க் காண்பது போல் ஏளனத்துடன் பார்த்தாள். அவளைச் சிறைப்படுத்திய அவர் தான் கைதியைப் போல் தவித்தார். அப்படிப்பட்டவள் அந்தக் கிழிந்த பாயில் எல்லாவற்றையும் இழந்தவள்போல அழுதுகொண்டி ருந்தாள். அரை மணி நாழிகை அழுதிருப்பாள். அவள் எழுவதற்கு முன் வந்து படுத்துவிட்டேன். திரும்பி வந்த அம்மா புரண்டுபுரண்டு படுத்தாள்.

மறுநாள் விடிகாலையில் செய்தி வந்தது, கோபால் பாபு இறந்து விட்டார் என்று. அம்மாவின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை.

விடுமுறை முடிய இன்னும் ஒரு வாரம் இருந்தது. வீட்டை விட்டு அதிகம் வெளியே போவதில்லை அம்மா. ஒரு நாள் மாலை, "டெல்லியிலிருந்து கொண்டு உன் கிராமத்தைப் பார்க்காதே. என் னோட வா" என்று அழைத்துப் போனாள். முதலில் டாக்டர் வீட்டுக்கு அழைத்துப் போய் அம்மைத் தடுப்புக்காக அம்மை குத்தினாள் எனக்கு. பின்பு பரந்து கிடந்த எங்கள் நிலங்களைத் தாண்டிச் சென்றோம். முதலில் ஓடுகள் வேய்ந்த அந்தச் சின்ன வீடு வந்தது; காலு சரணின் வீடு.

"காலு, ஏ காலூ!" என்று அம்மா அழைத்தாள்.

காலு வெளியே வந்தான். காலுவா அது? அவன் முகம் திருஷ்டி பரிகாரம்போலப் பயங்கரமாகச் சோபையற்று இருந்தது.

"என்ன மாஜீ?"

"ஷைலஜா வந்திருக்கிறாள் பார்!" காலு கண்களின் மேல் கை வைத்து என்னைப் பார்த்தான்.

"டெல்லியில் சாப்பாடு எல்லாம் எப்படி ஷைலு?" என்றான். தூக்கிவாரிப்போட்டது. பசி என்ற ஒன்றை அறியாத குற்றவாளியாக அவன் முன் நின்றேன். அவர்கள் சாப்பாட்டுக்காகத் துடிப்பவர்கள். வாழ்க்கையே ஒரு தவிப்புத்தான் அவர்களுக்கு. இந்த ஆத்மார்த்த மான, அடிப்படைத் துடிப்பை நான் உணராத வரையில் படிப்பி னால் நான் என்ன அறிய முடியும் என்று ஓர் அவமான உணர்ச்சி தோன்றியது. அம்மா என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"எங்களோடு வா காலூ" என்றாள்.

கதவைப் பூட்டிவிட்டு வந்தான் காலு.

"வயல் பக்கமாகப் போகலாம்."

"வேண்டாம் மாஜீ. ஷைலு பயப்படுவாள்."

"பயப்படட்டும்."

இருவரும் என்னுடன் நடந்தனர்.

"ஷைலூ, பேப்பரில் மட்டும் படித்தால் போதாது. பார்" என்றாள்.

அந்தி வேளையில், கொலை செய்து போடப்பட்ட உடல் போல், செத்துக் கிடந்தது நிலம். மங்கிய சிவப்பு ஒளியில் நிலத்தின் மேல் வெடிப்புக்கள், அகன்ற தாகம் உள்ள உதடுகள் போல் தென்பட்டன. நிலத்தின் ஒரு மூலையில்...

"அம்மா... அது என்ன?"

"காலுவின் மாடு" என்றாள் அம்மா; "நேற்று இறந்தது." சிறிது நேரத்துக்குப் பின் சொன்னாள்; "சாப்பிட ஒன்றும் இல்லாமல் செத்தது."

நட்சத்திரங்கள் மெல்ல உதிக்கும் வரை அம்மா என்னுடன் நடந்தாள். பத்திரிகைகள் சொல்லாதவற்றைக் கண்டேன். திரும்பக் காலுவை அவன் வீட்டில் விட்டுவிட்டு நடந்தோம்.

"அம்மா, காலுவின் மனைவி, குழந்தைகள் எங்கே?"

"யாரும் இப்போ இல்லை."

"ஏன்?"

"அம்மையில் போய்விட்டார்கள்."

அடித்தது போல் இருந்தது பதில்.

பேசாமல் நடந்தோம்.

"மாஜீ, ராமு தாதா கூப்பிட்டனுப்பினார்" என்று வந்தான் ரபீந்தர்.

ராமு தாதாவின் சிறு வீட்டில் ஓர் அழுக்கு மெத்தை மேல் அவர் மகள் பத்மா படுத்திருந்தாள். ஈர்க்குச்சிபோல் கை கால்கள். பாறாங் கல் போல் பெருத்த வயிறு. அவள் முகம் வெளுத்திருந்தது. அம்மா அவள் அருகில் அமர்ந்து அவள் கையை நீவிவிட்ட உடனேயே அவள் ஒரு பயங்கர ஓலத்துடன் துள்ளினாள். நான் என்ன என்று உணரும் முன்பே மெத்தை எல்லாம் ரத்தம் ஊறியது. அழாத, உயிரற்ற, சரி யாக உருப்பெறாத ஒரு பிண்டம் அவள் கால்களிடையே கிடந்தது. பத்மாவின் வாய் பிளந்து போயிற்று.

ராமு தாதா அவள் தலைமாட்டருகே அழாமல் உட்கார்ந்திருந் தார். அம்மாவின் முகத்தில் நெருப்பு உக்கிரமாக எரியும்போது ஏற் படும் ஓர் ஊதா நிற ஜ்வாலை பரவியது. அறையைச் சுத்தப்படுத்தி னாள் மௌனமாக மற்ற பெண்களுடன். பின்பு என்னுடன் கிளம்பி னாள்.

சாப்பாடு மௌனமாகவே நடைபெற்றது. மொட்டை மாடியில் நானும் அம்மாவும் படுத்தோம். நன்றாகத் தூங்கிவிட்டேன். அம்மா எழுந்துகொள்ளும் ஓசை கேட்டது. கறுப்புப் போர்வையால் தன்னைப் போர்த்திக்கொண்டாள்.

"அம்மா!..."

"என் பின்னால் வா, வேணுமானால்."

கீழே கூடத்தில் இருந்த அலமாரியைத் திறந்து டார்ச்சை எடுத் தாள். அதை ஏற்றாமல் அப்பாவின் அறையினுள் ஓசைப்படுத்தாமல் போனாள். மெல்ல அவர் தலையணையின் கீழ் கையை விட்டு ஒரு பெரிய சாவியை எடுத்தாள்.

பின் பக்கக் கதவை ஓசையின்றித் திறந்தாள். மடமடவென்று ஷெட்டை நோக்கி நடந்தாள். அவளுடன் அத்தனை வேகமாக நடக்க முடியவில்லை.

ஷெட்டை அடைந்ததும் அங்கே தொங்கிய பெரிய பூட்டைச் சாவியால் திறந்தாள். தடாலென்ற ஓசையுடன் ஷெட்டின் கதவு திறந்தது. முன்பிருந்த ஷெட் இல்லை அது. கள்ளிப் பெட்டிகளுக்குப் பதிலாக ஆயிரம் ஆயிரம் மூட்டைகள் அங்கே கிடந்தன. மூலையில் செருகியிருந்த அரிவாளால் வெறி கொண்டவள் போல் மூட்டைகளை அம்மா கீறிக் கிழித்தாள். அரிசியும், கோதுமையும் வெளியில் கொட்டின.

"குரல் கொடு ஷைலூ" என்றாள்; "எல்லாரும் வரட்டும்." நாவடைத்துப் போனேன். தூரத்தே அப்பாவின் உறுமல் கேட்டது. நொடியில் அப்பாவைப் போன்ற மற்றவர்கள் ஓடி வந்தனர். அரிவாளுடன் அம்மா திரும்பி, "எத்தனை நாள்தான் பதுக்குவீர்கள்?" என்றாள்.

என்ன நடக்கும் என்று நான் கற்பனை செய்யும் முன் ராம் ஷர்மாவின் வேலைக்காரன் அம்மாவின் மீது பாய்ந்தான். நிலவொளியில் என்ன நடந்தது என்று புரியவில்லை. 'மளக்' கென்று அம்மா சரிந்து விழுந்தாள். கறுப்புப் போர்வை விலகியது. கழுத்திலெல்லாம் ரத்தம். அவள் நீண்ட கூந்தலில் சிவப்புப் பரவியது.

"அம்மா!" என்று கூவ நினைத்தேன். ஓசையே கிளம்பவில்லை. அப்பாவும் மற்றவர்களும் கீழே கிடந்தவளைப் பார்த்தவாறு நின்றனர், கலவரத்துடன்.

அரிசி கொட்டி வழியும் அந்தப் பின்னணியில் மரங்கள் செறிந்த அந்த இடத்தில் அம்மா இறந்து கிடந்தாள். திடீரென்று விழுந்து கிடந்தது பத்மா போல் தோன்றியது. காலு சரணின் மாடு போல் தோன்றியது. இறந்துபோன காலு சரணின் மனைவி, குழந்தைகள் போல் தோன்றியது. வெடித்துக் கிடந்த நிலமாக அம்மா மாறுவது போல் தோன்றியது. சுற்றியும், இறக்கைகளை அடக்கிக்கொண்டு, மூக்கைத் தீட்டிக் கொண்டு பிணத்தை நோக்கும் வல்லூறுகள் நின்றனர்.

வானத்தைப் பார்த்தேன். நிஜமாகவே வல்லூறுகளின் மாமிசம் தின்று ஒளிரும் மூக்குகள் பளபளத்தன.

குரல் எழும்பியது. வீரிட்டு அலறியவாறே வீட்டை நோக்கி ஓடினேன்.

'கலைமகள்' தீபாவளி இதழ் 1974